**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**MCOP.No.158/2020- PW-2**

| | |
|---|---|
| Name | திரு.சுந்தர் |
| Husband/Father Name | திரு.சந்திரன் |
| ID Card | Verified |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 08.08.2025.

**குறுக்குவிசாரணை:–**

மனுதாரர் அமுதா கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். விபத்து சம்மந்தமாக இராணிப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. வாகன விபத்தை யார் ஏற்படுத்தியது என்று எனக்கு தெரியும். பிரகாஷ் என்ற ஓட்டுநர் தான் விபத்தை ஏற்படுத்தினார். பிரகாஷ் என்ற ஓட்டுநர் விபத்திற்கு காரணமில்லை என்றாலும், கோபி என்பவர் தான் கவனக்குறைவாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் சரியல்ல. விபத்தை சத்தம் கேட்டு பார்த்தேனா என்றால் விபத்தை நேரடியாக பார்த்தேன். 1–ம் மனுதாரரின் கணவர் குடி போதையில் வாகனத்தை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் மது போதையில் வாகனத்தை ஓட்டவில்லை. 1–ம் மனுதாரரின் கணவர் மது போதையில் வாகனத்தை ஓட்டிச்சென்றதாக மருத்துவ ஆவணங்கள் உள்ளது என்றாலும், நான் தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1–ம் மனுதாரர் எனக்கு உறவினர் இல்லை. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்.TN 25 AD 5095 ஆகும். விபத்து நடந்த இடம் ஆள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் வாகன வேக இரும்பு தடுப்பு உள்ளது. அதனால் அந்த இடத்தில் வாகனங்கள் வேகமாக வர முடியாது என்றால் அந்த சமயத்தில் அந்த வாகனம் வேகமாக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சம்பவ சமயத்தில் வாகனத்தை வேகமாக ஓட்டிவரவில்லை என்றாலும்,

மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.